**இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**

# மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை - 04.11.2015

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 30°செ முதல் 34°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 21°செ முதல் 26°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 15°செ முதல் 21°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் பல இடங்களில் மிதமானது முதல் கன மழை பெறப்பட்டது.

**வானிலை முன்னறிவிப்பு மற்றும் அறிவுரைகள் (04.11.2015 முதல் 08.11.2015)**

**1. மேற்கு மண்டலம்**

மேற்கு மாவட்டங்களான கோயமுத்தூரில் வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 31°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 84 முதல் 88 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 78 முதல் 82 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- ✓ கடந்த மற்றும் நடப்பு வாரங்களில் அதிக மழை மற்றும் காற்றின் ஈரப்பதம் அதிகமாக இருப்பதால் குளிர்கால இறவை கம்போடியா பருத்தியில் தயிர்நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. இதை கட்டுப்படுத்த 250 கிராம் கார்பன்டசிம் மருந்தினை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து 1 எக்டருக்கு தெளிக்கவும்.
- ✓ குறைந்த வெப்ப நிலை மற்றும் மழையின் காரணமாக சம்பா பருவத்தில் நடவு செய்துள்ள நெல்லில் துத்தநாக குறைபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. இதை நிவர்த்தி செய்ய 0.5 சதவீதம் துத்தநாக சல்பேட் மற்றும் 1 சதவீத யூரியா கரைசலை கலந்து இரு முறை 10 நாட்கள் இடைவெளியில் தெளிக்கவும்.
- ✓ திராட்சையில், அதிக காற்றின் ஈரப்பதம் மற்றும் குறைந்த வெப்ப நிலை காரணமாக சாம்பல் நோய் மற்றும் அடிச் சாம்பல் நோய் ஏற்படும் வாய்ப்புள்ளது. இதை கட்டுப்படுத்த 0.3 சதவீதம் நனையும் கந்தகத்தை சாம்பல் நோய்க்கும் 1 சதவீதம் போர்டாக்ஸ் கலவை அடி சாம்பல் நோய்க்கும் தெளிக்கவும்.
- ✓ தொடர்ந்து ஈரப்பதமான சூழ்நிலை நிலவுவதால் கால்நடை மற்றும் கோழி தீவனங்களில் பூஞ்சாண தாக்குதல் ஏற்படுவதால் வாந்தி மற்றும் பேதி ஏற்பட வாய்ப்புள்ளது. இதை தடுக்க தீவனங்களை உலர்த்தி பயன்படுத்தவும்.

**2. காவிரி டெல்டா மண்டலம்**

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமானமழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 31°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°செ முதல் 27°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 72 முதல் 90 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 2 கி.மீ முதல் 6 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மழை நீர் சூழ்ந்துள்ள வயல்களில் உடனடியாக வடிகால் வசதி ஏற்படுத்தி நீரினை வடித்து வேர்பகுதிக்கு காற்றோட்டம் கிடைக்கச் செய்யவும்.
- ✓ சம்பா நெற்பயிரில் ஊட்டச்சத்து பற்றாக்குறை தென்பட்டால் அதனை நிவர்த்தி செய்ய ஒரு ஏக்கருக்கு 25 கிலோ யூரியா + வேப்பம் புண்ணாக்கு 4 கிலோ என்ற அளவில் கலந்து இரவு முழுவதும் வைத்து பின்னர் 10 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் கலந்து தண்ணீர் வடிந்த உடன் வயலில் இடவும்.
- ✓ குறைந்த வெப்ப நிலை மற்றும் மழையின் காரணமாக சம்பா பருவத்தில் நடவு செய்துள்ள நெல்லில் துத்தநாக குறைபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. இதை நிவர்த்தி செய்ய 0.5 சதவீதம் துத்தநாக சல்பேட் மற்றும் 1 சதவீத யூரியா கரைசலை கலந்து இரு முறை 10 நாட்கள் இடைவெளியில் தெளிக்கவும்.

**3. தெற்கு மண்டலம் - 1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் அதிகமான மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 28°செ முதல் 30°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை $24^{0}$செ முதல் $25^{0}$செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 88 முதல் 94 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 4 கி.மீ முதல் 8 கி.மீ வேகத்திலும் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் தினங்களில் ஆங்காங்கே கனமழை எதிர்பார்க்கப்படுவதால் நெற்பயிருக்கு நீர்ப்பாசனம் செய்வதை தவிர்த்து வயலில் போதிய வடிகால் வசதி செய்யவும்.
- ✓ மானாவாரி நிலங்களில் விதைக்கப்பட்ட பயிர்களில் நீர் தேங்கினால் பயிர்கள் அழுக வாய்ப்புண்டு. ஆகவே தகுந்த வடிகால் வசதி செய்யவும்.
- ✓ மானாவாரி பருத்தி, சோளம், கம்பு மற்றும் மக்காச்சோளம் பயிர்களில் தக்க மண் ஈரம் வந்வுடன் 15 நாள் வயதுடைய பயிர்களில் செடியை களைத்து கை மற்றும் கொத்து களை எடுக்கவும்.
- ✓ வரும் தினங்களில் ஆங்காங்கே கனமழை எதிர்பார்க்கப்படுவதால் மிளகாய் நீர் தேங்குவதை தவிர்க்க போதிய வடிகால் வசதி செய்யவும்.

**4. தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் தெற்கு மண்டலமான திண்டுக்கல், மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, தேனி ஆகிய மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும் இலேசானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலை 29°செ முதல் 31°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 20°செ முதல் 24°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 78 முதல் 90 சதவீதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 4 கி.மீ முதல் 12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ பெறப்பட்ட கனமழையாலும் மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையினாலும் மக்காச்சோளத்தில் அடிச்சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த ஒரு எக்டருக்கு மெட்டலாக்சைல்+ மேன்கோசெப் @ 100 கிராம் ஆகியவற்றை விதைத்த 20 ம் நாள் தெளிக்கவும்.
- ✓ தொடர்ந்து வயல்களில் தண்ணீர் தேங்குவதால் கரும்பில் இரும்பு சத்து பற்றாக்குறை காணபடபடும். ஆகவே இரும்பு சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்ய 250 கிராம் பெரஸ் சல்பேட் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- ✓ நெற்பயிரில் பழுப்பு நிற நோய் காணப்பட்டால் விவசாயிகள் 10-15 நாட்கள் இடைவெளியில் 2-3 முறை மேங்கோசெப் 2 கிராமை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

**5. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 18°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 88 முதல் 94 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 6 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை.**

- ✓ ஐந்து நாட்களுக்கு மாவட்டத்தில் மிதமானது முதல் பலத்த மழை எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ சாகுபடி செய்யப்பட்ட காய்கறி பயிர்கள் மற்றும் பழ மரத்தோட்டங்களுக்கு தொடர்ந்து மழை எதிர்பார்க்கப்படுவதால் தகுந்த வடிகால் செய்து கொடுக்கவும்.
- ✓ தொடர் மழையால் காய்கறி பயிர்களில் வேர் அழுகல் நோய் வர வாய்ப்புள்ளது. 1 லிட்டர் தண்ணீரில் 1 கிராம் கார்பன்டசிம் மருந்தை கலந்து தாக்கப்பட்ட பயிர்களில் வேர் பாகத்தில் ஊற்றவும்.
- ✓ **6.வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 25°செ முதல் 31°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 29°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 80 முதல் 93 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகமானது 3 கி.மீ முதல் 8 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வடகிழக்கு பருவமழையின் தாக்கம் உள்மாவட்டங்களிலும் பரவலாக காணப்படுகிறது, மழையின் காரணமாக வெப்ப அளவுகள் குறைந்தும், காற்றின் ஈரப்பதம் சற்றே உயர்ந்தும் காணப்படும், தீவனத்தில் ஈரப்பதம் 11 சதவீதத்திற்கு அதிகமாக இருக்கும் பட்சத்தில் காற்றில் நிலவும் ஈரப்பதத்தால் தீவனத்தில் பூஞ்சை நச்சு உற்பத்தி செய்யும் நுண்ணுயிரிகளின் தாக்கமும் பெருக்கமும் அதிகமாக காணப்படும். ஆகவே தீவனத்தினை கவனமாக கையாளவும்.
- ✓ ஐப்பசி ,கார்த்திகைப் பட்டத்தில் நிலக்கடலை சகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் டி,எம்,வி,13. கோகோ,7 ஆகிய இரகங்களை (105 நாட்கள்) தேர்ந்தெடுத்து விதைப்பு செய்யலாம். ஒரு ஏக்கருக்கு 55கிலோ விதை தேவைப்படுகிறது, ஒரு கிலோ விதைக்கு 4கிராம் *டிரைக்கோடெர்மா விரிடி* கலந்து விதைப்பு செய்வதால் நோய்களிலிருந்து பயிரை பாதுகாக்கலாம்,
- ✓ மானாவரியில் சாகுபடி செய்யப்பட்ட 20 நாள் பச்சைபயிரில் மழை நிறன்ற வுடன் செடியை களைத்து கைக் களை மற்றும் கொத்துக்களை எடுக்கவும்.

***7. வடகிழக்கு மண்டலம்***

*அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை **31**°செ முதல் **32**°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை **23**°செ முதல் **24**°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் **63** முதல் **94** சதவிகிதமாகவும், காற்றின் வேகம் **2** கி.மீ முதல் **4** கி.மீ வரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

***வேளாண் அறிவுரை***

- ✓ இளம் கன்றுகள் மற்றும் ஆட்டு குட்டிகளை மழையில் நனையாமல் பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- ✓ கால்நடைகளின் கொட்டகையின் அருகில் தண்ணீர் தேங்காதவாறு பார்த்துக்கொள்வதன் மூலம் ஒட்டுண்ணிகளால் பரவும் நோய்களை தடுக்கலாம்.
- ✓ உழவர்கள் தங்கள் கால்நடைகளுக்கு தேவையான உலர் தீவனத்தை மழையில் நனையாதவாறு சேமிக்கும் படி கேட்டுக்கொள்கிறோம்.
- ✓ அடர்தீவன உற்ப்பத்திக்கு தேவையான மூலப்பொருட்களை மழையில் நனையாமல் பாதுகாப்பதால் அப்லாடாக்ஸின் எனும் நச்சு உற்பத்தியை தடுக்கலாம்.
- ✓ கால்நடைகளின் கொட்டகையின் மேற்கூரையை சரி செய்து கொட்டகையின் உள் தண்ணீர் புகாமல் பார்த்துக் கொள்ளவும்.
- ✓ கோழிப் பண்ணைகளில் நனைந்த கூளத்தை அகற்றிவிட்டு புதிய கூளத்தை பரப்ப வேண்டும்.
- ✓ அடுத்த ஐந்து நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்புள்ளதால் உழவர்கள் தங்களுடை***ய*** நெற்பயிர்களுக்கு பூச்சி மருந்தை அடிப்பதை தவிர்க்குமாறும் மற்றும் உரமிடுதல் தள்ளிப்போ***டவும்***
- ✓ உழவர்கள் மழைநீரை சேகரிப்பதற்கான தகுந்த வழிமுறைகளை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்..

***8.அதிக மழை பெறும் மண்டலம்***

*வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிது. பகல்நேர வெப்பநிலை **29**$^0$செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை **23**$^0$செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் **82** முதல் **86** சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு **4** கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

***வேளாண் அறிவுரை***

- ✓ *வாழை தார்களை அறுவடை செய்யும் பொழுது மழை இருப்பதால் பாலித்தீன் கவர் (2%) பயன்படுத்தி வாழைத் தார்களை பொதிவதன் மூலம் வாழைத் தார்களின் தரத்தை அதிகரிக்கலாம்.*
- ✓ *அன்னாசியில் பூ பூக்கும் பருவத்தில் உள்ள கொண்டைப் பகுதியில் **20** பிபிஎம் எத்ரல் @ **50** மி.லி/செடி வீதம் ஊற்றுவதால் சீராக ஒரே நேரத்தில் பூக்கச் செய்யலாம்..*
- ✓ *இஞ்சியில் மென் (கிழங்கு) அழுகல் நோய்த் தாக்குதல் தென்பட்டால் நோய் தாக்கிய கிழங்குகளை அகற்றி விட வேண்டும். நோய் பரவாமல் தடுக்க ஒரு சத போர்டோ கலவையைப் பாத்திகளில் ஊற்ற வேண்டும்.*
- ✓ *மிளகு வளரும் கொடிகளை தாங்கு மரங்களுடன் சேர்த்து கட்டி ஏற்றி விடவும்.*
- ✓ *மழை இருப்பதால், அறுவடை செய்யப்பட்ட நெற்கதிர்களை குறைந்தபட்ச ஈரப்பதம் 12% உலர்த்தியபின் உலர்வான இடங்களில் சேமித்து வைக்கவும்.*

***பேராசிரியர் மற்றும் தலைவர்***

***தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்***

***வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்***

***கோவை - 3***